**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 120** **நாள்: 24.08.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் 1 முதல் 18 வயது நிரம்பிய மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம். (SMSA) சென்னை மாவட்டத்தின் சார்பாக பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் 1 முதல் 18 வயது நிரம்பிய செவித்திறன் குறைபாடு, பார்வைத்திறன் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 10 இடங்களில் 27.08.2018 முதல் 31.08.2018 வரை நடைபெற உள்ளது. இம்முகாம்களில் முட நீக்கியல் வல்லுநர், தொண்டை, காது, மூக்கு மருத்துவர், மனநல மருத்துவர், கண் மருத்துவர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் ஆகியோர் குழந்தைகளை பரிசோதனை செய்து மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை வழங்க பரிந்துரை செய்வார்கள். இம்முகாமில் கலந்து கொள்பவர்கள் குழந்தைகளின் 4 புகைப்படம், மருத்துவச் சான்றிதழ், அடையாள அட்டை நகல் மற்றும் பெற்றோர்களின் வருவாய் சான்றிதழ் கொண்டு வர வேண்டும். இச்சிறப்பு முகாம்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் இடங்களில் காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெற உள்ளது. பொதுமக்கள் இம்மருத்துவ முகாமில் கலந்து கொண்டு தங்களின் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு சிகிச்சைகள் பெற்று பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | நாள் | மண்டலம் | நடைபெறும் இடம் | தொடர் கொள்ள வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1 | 27.08.2018 | மண்டலம்–4<br>தண்டையார்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>எண். 13 புத்தா தெரு,<br>கொருக்குபேட்டை, சென்னை–21 | 9788858510<br>9884147647<br>9176489291 |
| 2 | | மண்டலம்–13<br>அடையாறு | சென்னை தொடக்கப்பள்ளி,<br>29வது குறுக்குத்தெரு, இந்திரா நகர்<br>அடையாறு, சென்னை–20 | 9788858519<br>9445718737<br>9092890370 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 28.08.2018 | மண்டலம்–5<br>இராயபுரம் | சென்னை உருது பெண்கள் தொடக்கப்பள்ளி, எண் 71 அரத்தூண் சாலை, இராயபுரம், சென்னை–13 | 9788858511<br>9789014961<br>8939054856 |
| 4 | | மண்டலம்–10<br>கோடம்பாக்கம் | சென்னை தொடக்கப்பள்ளி, 4வது பிரதான சாலை, சி.ஐ.டி நகர், நந்தனம், சென்னை–35. | 9788858518<br>9444758150<br>9789081918 |
| 5 | 29.08.2018 | மண்டலம்–10<br>கோடம்பாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி, பிரகாசம் சாலை, (பனகல் பூங்கா அருகல்) தி நகர், சென்னை–17. | 9788858517<br>9940211634<br>9445322173 |
| 6 | | மண்டலம்–5<br>இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி, வி.கே.பிள்ளைத் தெரு, சூளை, சென்னை–112. | 9788858512<br>9840142460<br>9445249168 |
| 7 | 30.08.2018 | மண்டலம்–6<br>திரு.வி.க.நகர் | சென்னை தொடக்கப்பள்ளி, டி.வி.கே.நகர் பெரம்பூர், சென்னை–11 (Near T.V.K. Nagar Bus stop Dippo) | 9788858513<br>9043856276<br>9790741543 |
| 8 | | மண்டலம்–9<br>தேனாம்பேட்டை | சென்னை சமுதாய கல்லூரி எண்.24, அருணாச்சலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–05. | 9788858515<br>9788877955<br>8939254871 |
| 9 | 31.08.2018 | மண்டலம்–9<br>தேனாம்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி, இராம தெரு, வள்ளுவர் கோட்டம் (சுதந்திர பூங்கா அருகில்) நுங்கம்பாக்கம், சென்னை–34. | 9788858516<br>9444049403<br>9176383727 |
| 10 | | மண்டலம்–8<br>அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி Mc. Nicholas Road. சேத்துபட்டு, சென்னை–31. (Near Chetpet Bridge) | 9788858514<br>7401331608<br>8925067494 |

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**